சுருக்கம்

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பகுதி – 2 திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளுக்கென 2008–09ம் ஆண்டிற்கு 21 பொலிரோ ஈப்புகள் வாங்கப்பட்டது – 21 ஈப்பு ஓட்டுனர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்படுகிறது

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை

அரசாணை (நிலை)எண்.220 நாள்.16.11.2009

படிக்க

1. அரசாணை (இருபதாண்டு) எண்.77 ந.நி.(ம)கு.வ துறை நாள் 22.05.2008
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண்.9755/2008/அ3 நாள்.12.06.2008 மற்றும் 16.12.2008

----

ஆணை :

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சி துறையில் பேரூராட்சிகளின் இயககுநகரச் செயற்பொறியாளர் மற்றும் 16 மண்டலங்களுக்குட்பட்ட 20 செயற்பொறியாளர்களுக்கு ஆக மொத்தம் 21 அலுவலர்களுக்கு தலா ஒரு பொலிரோ ஈப்பு வழங்க ஈப்பு ஒன்றுக்கு ரூ.5.00 லட்சம் வீதம் மொத்தம் 21 பொலிரோ ஈப்புகள் தற்போதுள்ள நடைமுறைகளின்படி வாங்குவதற்கு மொத்தம் ரூ.105.00 லட்சம் 2008–2009ம் ஆண்டிற்கு பகுதி–II திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

2. பேரூராட்சிகளில் பகுதி – II திட்டத்தின் கீழ் பேரூராட்சிகள் இயக்குனரக செயற்பொறியாளர் மற்றும் 16 மண்டலங்களுக்குட்பட்ட 20 உதவி செயற்பொறியாளர்களுக்கு 21 எண்ணிக்கையிலான பொலிரோ ஈப்புகள் இயக்குவதற்கு முதலில் ரூ.5200–20200+GP.Rs.2000/- என்ற ஊதிய விகிதத்தில் 21 பணியிடங்கள் தோற்றுவித்து அரசால் ஆணை வெளியிடப்பட்ட பின்னர் அதில் ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களை பணி நியமனம் செய்தல் தொடர்பாக முன்னுரிமை அளித்து பரிசீலிக்கலாமெனவும், அவ்வாறு ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவ வீரர்கள் கிடைக்கப்பெறவில்லையெனில் மாவட்ட வேலை வாய்ப்பகத்தின் மூலம் மேற்படி பணியிடங்களை பூர்த்தி செய்யலாம் எனவும இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து பேரூராட்சிகளின் இயக்குநரகத்தில் உள்ள ஒரு செயற்பொறியாளர் மற்றும் 16 மண்டலங்களில் உள்ள 20 உதவி செயற் பொறியாளர்களுக்கு 21 பொலிரோ ஈப்புகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி 21 பொலிரோ ஈப்புகளை இயக்குவதற்கு 21 ஓட்டுநர் பணியிடங்களை ரூ.5200–20200+2000/- G.P என்ற ஊதிய விகிதத்தில் தோற்றுவித்து அப்பணியிடங்களை அரசாணை எண்.91 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை நாள்.06.07.2006ன்படி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் (Consolidae pay on contract basis) நியமனம் செய்யவும் மேற்படி கழகம் மூலம் தகுந்த நபர்கள் கிடைக்கப் பெறவில்லையெனில் மட்டுமே வேலைவாய்ப்பகம் மூலம் நேரடி நியம செய்யலாம் எனவும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அரசு அனுமதியளிக்கிறது.

4. மேலே பத்தி 3–ல் அளிக்கப்பட்டுள்ள ஒப்பளிப்பு காரணமாக ஏற்படும் செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

பேரூராட்சி இயக்ககம்

2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் 001. நெறிப்படுத்தலும் நிறுவாகமும் திட்டத்தில் சேராதது – A1 பேரூராட்சி இயக்ககம் 33.தொழில்முறை சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04.ஒப்பந்த ஊதியம் (து.தொ.கு.2515 00 001A13343)

மண்டல பேரூராட்சி அலுவலகங்கள்

2515 – 00 ஏனைய ஊரக வளாச்சித் திட்டங்கள் 001 நெறிப்படுத்தலும் நிறுவாகமும் f திட்டத்தில்சேராதது –AJ மாவட்ட பேரூராட்சி அலுவலகங்கள் 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் 04. ஒப்பந்த ஊதியம் (து.தொ.கு.2515 00 001 AJ 3341)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவீனம் "புது துணைப்பணி (New insturrent of Service)" குறித்ததாகும். இச்செலவீனத்திற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒபபுதலை எதிர்நோக்கி இச்செலவீனம் முதற்காண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு மூலம் மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.தி–பொ1) துறைபால் தனியே வெளியிடப்படும் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவிற்காக தொகையை வழங்குவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நித (வ.செ.தி–பொ.1) துறைக்கு இவ்வாணையின் நகலுடன் இருபடிகளில் விண்ணபிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2009.2010ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை அரசின் நிதித்துறைக்கு உரிய காலத்தில் தவறாமல் அனுப்பிவைக்கும்படியும் பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையில்ன அ.சா.எண்.66060/CMPC/09 நாள்.10.11.2009ல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1029 (ஆயிரத்து இருபத்தி ஒன்பது) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் பார்டி
அரசு செயலாளர்

பெறுநர்
பேரூராட்சிகளின் இயக்குநா, சென்னை–108.
நகல்
மாண்புமிகு நிதியமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம் சென்னை–9
நிதித்துறை சென்னை–9
செயலரின் தனிச்செயலர் (ந.நி.(ம) கு.வ) ) சென்னை–9
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர்வழங்கல் (அநி2)துறை, சென்னை–9
நிதி(ந.நி.(ம)கு.வதுறை (MPC/BG3/BG4). சென்னை–9
மாநில கணக்காயர், சென்னை–18

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்